# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்**:154/மா/**2025**

**நாள்: 23.07.2025**

திரு.T.R. ஸ்ரீநிவாசன் — மனுதாரர்
சென்னை 91

மண்டல அலுவலர் மண்டலம் 14 — எதிர் மனுதாரர்
பெரு நகர சென்னை மாநகராட்சி

சென்னை 91, புழுதிவாக்கம், பாலாஜி நகர், 23வது தெரு, மனை எண் 86, கதவு எண் 3/2 என்கிற முகவரியில் வசிக்கும் திருT.R. ஸ்ரீநிவாசன் என்பவரின் 23.04.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 24.04.2025 அன்று பெறப்பட்டு 154/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை 91, புழுதிவாக்கம், பாலாஜி நகர், 23வது தெரு, மனை எண் 86, கதவு எண் 3/2 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.T.R. ஸ்ரீநிவாசன் என்பவர் 23.04.2025 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“சென்னை பெருநகர மாநகராட்சி, மண்டலம் 14, வார்டு 186ல் வியாச வித்யாலயா பள்ளி எதிரில் உள்ள வீராங்கல் ஓடையின் Zero Point திறந்தவெளி ஆரம்ப பகுதியில் புழுதிவாக்கம், பாலாஜி நகர் 18, 19, 20, 21, 23வது தெருக்கள் மற்றும் சுற்றி உள்ள குடியிருப்பு பகுதிகளில் மழைக்காலங்களில் வீடுகளுக்குள் வெள்ள நீர் புகாமல் தடுத்திட கான்கிரீட் தடுப்புச் சுவர் அல்லது இரும்பு ஷட்டர் அமைத்திடக் கோரி 17.03.2025ல் மாநகராட்சி ஆணையர் மற்றும் தலைமையிட மேற்பார்வை பொறியாளர் (மழைநீர் வடிகால் துறை) மண்டலம்14ன் மண்டல அலுவலர், செயற் பொறியாளர் 1, உதவி செயற்பொறியாளர் (மழைநீர் வடிகால் துறை) வார்டு 186ன் உதவி பொறியாளர் ஆகியோரிடம் மனு வழங்கப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடம் கண்காணிப்பு பொறியாளர் மழைநீர்வடிகால் துறை சென்னை 3 அவர்கள் ம.நீ.வ.து.ந.க எண் 24/0847/2025 நாள் 07.04.2025ல் பதில் வழங்கினார். அதில் இது குறித்து தெரிவிப்பது யாதெனில் வீராங்கல் ஓடை புனரமைக்கும் பணி மண்டலம் 14ன் மூலம் மதிப்பீடுகள் தயாரித்து மேற்கொள்ளப்படவுள்ளதால் இம்மனு மேல் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு மண்டலம் 14க்கு அனுப்பப்படுகிறது என தெரிவித்துள்ளார்.

மண்டலம் 14ன் செயற்பொறியாளர் 1 அவர்கள் இடத்தினை 24.03.2025 அன்று நேரடியாக கள ஆய்வு செய்தார்.அச்சமயம் வீராங்கல் ஓடை மாநகராட்சி கட்டுப்பாட்டின் கீழ் உள்ளதால் “Zero Point “ பகுதியில் கான்கிரீட் தடுப்புச்சுவர் அல்லது இரும்பு ஷட்டர் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

மேலும் மண்டலம் 14ன் மூலம் கட்டமைக்கப்பட்ட ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால்களின் தண்ணீர் வீராங்கல் ஓடையில் நேரடியாக விழும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இது தவறான கட்டமைப்பாகும். வீராங்கல் ஓடையில் பருவமழையின் சமயம் வெள்ளம் அதிகமாக வரும்போது தண்ணீரின் அழுத்தம் காரணமாக மாநகராட்சி வடிகாலில் மழைநீர் பின்னோக்கித்தான் வரும். அதனால் வீராங்கல் ஓடையின் அருகில் உள்ள நான்கு மாநகராட்சி மழைநீர் வடிகால்களை சற்று வளைத்து திருப்பி வடிவமைப்பை மாற்றி கட்டமைக்கப்படும். இவ்வாறு மாற்றி அமைத்தால் பருவ மழைக்காலங்களில் தண்ணீர் வடிகாலில் பின்னோக்கி வரும் பாதிப்பும் சற்று குறையும் என தெரிவித்து, மழைநீர் வடிகால்களை கட்டமைத்த ஒப்பந்தக்காரர்களிடம் தெரிவித்து உடனடியாக மாற்றி அமைக்கப்படும் என்றார். அவ்வாறு மாற்றி அமைக்காததால் அதனை செய்திடக் கோரி 02.04.2025ல் தனி மனு மண்டலம் 14ன் மாநகராட்சி அதிகாரிகளிடம் அளிக்கப்பட்டது. எவ்வித மேல் நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மண்டலம் 14, வார்டு 186ல் பாலாஜி நகர் 24 வது தெருவில் கடந்த 2023ம் ஆண்டு ஒரு புதிய மழைநீர் வடிகால் கட்டமைக்கப்பட்டது. அதன் நீளம் 170 மீட்டர், அகலம் 0.90 மீட்டர், உயரம் 0.90 மீட்டர் இம் மழைநீர் வடிகாலின் வழியாக செல்லும் மழைநீர் வீராங்கல் ஓடையில் கலக்க வேண்டும். இம் மழைநீர் வடிகாலினை ஒப்பந்ததாரர் மழைநீர் வீராங்கல் ஓடையை சென்றடையும் வகையில் உரிய வாட்டத்துடன் அளவீடு செய்து வடிவமைக்காததால், மழைநீர் வீராங்கல் ஓடையை சென்று சேராமல், மழைநீர் வடிகாலில் பெரும்பாலும் தேங்கி நின்றது. இதனால் பாலாஜி நகர் 21, 23வது தெருக்களில் வெள்ள பாதிப்பு ஏற்பட்டது.

மழைநீர் வடிகாலில் மழைநீர் செல்வது தடைப்பட்டு தேங்கி நிற்பது குறித்து மண்டலம் 14ன் மாநகராட்சி அதிகாரிகளிடம் தெரிவித்தன்படி மீண்டும் கான்கிரீட் போட்டனர். இதனால் மழைநீர் வடிகாலின் உயரம் பாதியாக குறைந்துவிட்டது. தற்பொழுதும் மழைநீர் வடிகாலில் 4.0 இன்ச் அளவில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. இது குறித்து 27.03.2025ல் தினமலரில் செய்தி வந்துள்ளது. இந்த நிலையில் மேற்கண்ட வியாச வித்யாலயா பள்ளி அருகில் உள்ள ஜீரோ பாயிண்ட் பகுதியில் மண்டலம் 14ன் மாநகராட்சி அதிகாரிகள் தடுப்புச்சுவர் அமைக்காமல் கணேஷ் நகரில் அமைக்கப்பட்டு வரும் புதிய மிகப்பெரிய மழைநீர் வடிகாலின் தண்ணீரும் இதில் செல்லும் வகையில் கட்டமைத்து வருகின்றனர்.

வீராங்கல் ஓடை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி 5(2)) துறை அரசாணை நிலை எண் 136 நாள் 18.10.2024ன் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் பராமரிப்பு பணிக்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. அதில் வரிசை எண் 7 (i) (ii)ல் கீழ்க்கண்டவாறு அரசு உத்தரவில் உள்ளது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி (5(2)) துறை அரசாணை நிலை எண் 136 நாள் 18.10.2024ன் ஷரத்து 7ல் வரிசை எண் (i). (ii), (iii), (iv) மற்றும் 8ல் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

(i) பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குள், நீர்வளத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள ஓட்டேரி நல்லா கால்வாய், விருகம்பாக்கம் கால்வாய் மற்றும் வீராங்கல் ஓடைஆகிய மூன்று வடிகால்களை பராமரிப்பு பணிகளுக்காக பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொள்ளப்படும்.

(ii) அதற்கேற்ப, அந்நீர்நிலைகளுக்கான மாற்றங்கள், அதற்கு ஏற்ற திருத்தங்கள், திட்டங்கள் மற்றும் செயலாக்கங்கள், நீர்நிலை படுகைகளை மேம்படுத்துதல் போன்ற அனைத்துவகை செயல்பாடுகளையும் பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் பராமரிப்பிற்கு ஒப்படைக்குமாறு நீர்வளத்துறை அறிவுறுத்தப்படுகிறது.

(iii) இம்மூன்று நீர்நிலைகளில் நீரியல் தொடர்பாக தொழில்நுட்ப ஆலோசனைகளை பெருநகர சென்னை மாநகராட்சி நீர்வளத்துறையிடம் பெற்றுக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

மேற்காணும் அரசாணையில் தெரிவித்துள்ளவாறு சென்னை பெருநகர மாநகராட்சி ஆணையர், தலைமையிட மழைநீர் வடிகால் துறை கண்காணிப்பாளர், மற்றும் வட்டார துணை ஆணையர், மண்டலம் 14ன் மண்டல அலுவலர், செயற்பொறியாளர் ஆகிய உயர் அதிகாரிகள் அரசாணை iiல் குறிப்பிட்டுள்ளபடி மாற்றங்கள், அதற்கு ஏற்ற திருத்தங்கள் மற்றும் செயலாக்கங்கள் செய்து வியாச வித்யாலயா பள்ளி அருகில் உள்ள வீராங்கல் ஓடையின் Zero Point பகுதியில் கான்கிரீட் தடுப்புச்சுவர் அல்லது இரும்பு ஷட்டர் அமைத்து புழுதிவாக்கம் பாலாஜி நகர் பகுதிகளில் உள்ள வீடுகளில் வெள்ளம் புகாமல் பொதுமக்களை மழைக்காலங்களில் வெள்ள பாதிப்பில் இருந்து காப்பாற்றலாம். ஆனால் தடுப்புச்சுவர் அமைக்காமல் மண்டலம் 14ன் மாநகராட்சி அதிகாரிகள் காலதாமதம் செய்து வருகின்றனர்.

பெருமதிப்பிற்குரிய தமிழ்நாடு உள்ளாட்சி முறை மன்ற நடுவர் அவர்கள் எனது இந்த மனுவினை கருணையுடன் பரிசீலனை செய்து விசாரணைக்கு ஏற்று விசாரணை தேதி வழங்கி வருகின்ற 2025 பருவ மழைக்கு முன்னர் புழுதிவாக்கம், வார்டு 186ல் பாலாஜி நகர் 18வது தெரு வியாச வித்யாலயா பள்ளி அருகில் உள்ள வீராங்கல் ஓடையின் திறந்தவெளி Zero Point பகுதியில் கான்கிரீட் தடுப்புச்சுவர் அல்லது இரும்பு ஷட்டர் கொண்டு அடைத்திடவும், ஏற்கனவே மண்டலம் 14ன் மூலம் தவறாக கட்டமைக்கப்பட்டுள்ள மாநகராட்சியின் நான்கு மழைநீர் வடிகாலினையும் சிறிது வளைத்து மாற்றி வடிவமைத்திடவும், மண்டலம் 14ன் அடுத்து வரும் மாதாந்திர வார்டு குழு கூட்டத்தில் பொருளாக வைத்து தீர்மானம் நிறைவேற்றி பணிகளை செய்திட உதவி புரியுமாறும் உரிய ஆணை பிறப்பித்து உத்தரவினை வழங்கிடுமாறும் பணிந்து வணங்கி வேண்டுகிறேன்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 14.5.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலர் கடிதம் ம.அ.14 ந.க. எண் அ10/4081/2025 நாள் 01.07.2025–ன் அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

" பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14 வார்டு 186ல் "Zero Point" இரும்பு ஷட்டர் அமைத்திட செல்லும் அதிகப்படியான மழைநீர் புழுதிவாக்கம் பகுதியில் உள்ளே செல்லாதவாறு வியாச வித்யாலயா பள்ளி அருகில் (Zero Point ) கான்கிரிட் சுவருடன் கூடிய இரும்பு ஷட்டர் அமைப்பதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. உரிய அனுமதி பெறப்பட்டு பணி நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்."

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 03.07.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 23.06.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 03.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"சென்னை பெருநகர மாநகராட்சி, மண்டலம் 14, வார்டு 186ல் வியாச வித்யாலயா பள்ளி எதிரில் உள்ள வீராங்கல் ஒடையின் "Zero Point" திறந்த வெளி ஆரம்ப பகுதியில் புழுதிவாக்கம் பாலாஜி நகர் 18,19, 20, 21, 23 வது தெருக்கள் மற்றும் சுற்றி உள்ள குடியிருப்பு பகுதிகளில் மழைக்காலங்களில் வீடுகளுக்குள் வெள்ளநீர் புகாமல் தடுத்திட கான்கீரிட் தடுப்புச் சுவர் அல்லது இரும்பு ஷட்டர் அமைத்திடக் கோரப்பட்டது.

மண்டலம் 14ன் செயற்பொறியாளர் 1, அவர்கள் இடத்தினை 24.03.2025 அன்று நேரடியாக கள ஆய்வு செய்தார். அச்சமயம் வீராங்கல் ஓடை மாநகராட்சி கட்டுப்பாட்டின் கீழ் உள்ளதால் "Zero Point" பகுதியில் கான்கிரீட் தடுப்புச் சுவர் அல்லது இரும்பு ஷட்டர் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். அதன் தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் தனிப்பிரிவுக்கும் மண்டல அலுவலர் ம.அ.14.ந.க.எண்.அ6/4487/2025 நாள் 07.05.2025 மற்றும் கடித எண்.ம.அ.14.ந.க.எண்.அ6/4486/2025, நாள் 29.05.2025 கடிதம் வாயிலாக தெரிவித்து அதன் கடித விவரத்தினை மனுதாரருக்கும் வழங்கியுள்ளார். ஆனால் இது நாள் வரை மண்டலம் 14ல் எவ்வித பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

மேலும் மண்டலம் 14ன் மூலம் கட்டமைக்கப்பட்ட ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால்களின் தண்ணீர் வீராங்கல் ஓடையில் நேரடியாக விழும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இது தவறான கட்டமைப்பாகும். வீராங்கல் ஓடையில் பருவ மழையின் சமயம் வெள்ளம் அதிகமாக வரும்போது தண்ணீரின் அழுத்தம் கரணமாக மாநகராட்சி வடிகாலில் மழைநீர் பின்னோக்கித் தான் வரும். அதனால் வீராங்கல் ஓடையின் அருகில் உள்ள நான்கு மாநகராட்சி மழைநீர் வடிகால்களை சற்று வளைத்து திருப்பி வடிவமைப்பை மாற்றி கட்டமைக்கப்படும். இவ்வாறு மாற்றி அமைத்தால் பருவ மழைக்காலங்களில் தண்ணீர் வடிகாலில் பின்னோக்கி வரும் பாதிப்பும் சற்று குறையும் என தெரிவித்து, மழைநீர் வடிகால்களை கட்டமைத்த ஒப்பந்தக்காரர்களிடம் தெரிவித்து உடனடியாக மாற்றி அமைக்கப்படும் என்றார். அவ்வாறு மாற்றி அமைக்காததால் அதனை செய்திடக் கோரி 02.04.2020ல் தனி மனு மண்டலம் 14ன் மாநகராட்சி அதிகாரிகளிடம் அளிக்கப்பட்டது. எவ்வித மேல் நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பெருமதிப்பிற்குரிய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்கள் எனது இந்த மனுவினை கருணையுடன் பரிசீலனை செய்து வருகின்ற 2025 பருவ மழைக்கு முன்னர் புழுதிவாக்கம், வார்டு 186ல் பாலாஜி நகர் 18வது தெரு, வியாச வித்யாலயா பள்ளி அருகில் உள்ள வீராங்கல் ஓடையின் திறந்தவெளி "Zero Point"பகுதியில் கான்கிரீட் தடுப்புச்சுவர் அல்லது இரும்பு ஷட்டர் கொண்டு அமைத்திடவும், ஏற்கனவே மண்டலம் 14ன் மூலம் தவறாக கட்டமைக்கப்பட்டுள்ள மாநகராட்சியின் நான்கு மழைநீர் வடிகாலினையும் சிறிது வளைத்து மாற்றி வடிவமைத்திடவும், குறிப்பிட்ட கால கெடுவிற்குள் பணிகளை செய்திட உத்தரவினை வழங்கிடுமாறும் இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் வணங்கி வேண்டுகிறேன்.''.

6. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்14ன் உதவிப்பொறியாளர் 03.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

''பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 14, வார்டு 186–ல் ("Zero Point") இரும்பு ஷட்டர் அமைத்து அதிகப்படியான மழைநீர் புழுதிவாக்கம் பகுதியில் உள்ளே செல்லாதவாறு வியாச வித்யாலயா பள்ளி அருகில் ("Zero Point") கான்கிரீட் சுவருடன் கூடிய இரும்பு ஷட்டர் அமைப்பதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வார்டு கமிட்டியில் ஒப்புதல் பெறப்பட்டு பணி மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

7. மனுதாரரின் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலரின் அறிக்கை, மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

சென்னை பெருநகர மாநகராட்சி, மண்டலம் 14, வார்டு 186ல் வியாச வித்யாலயா பள்ளி எதிரில் உள்ள வீராங்கல் ஓடையின் "Zero Point" திறந்த வெளி ஆரம்ப பகுதியில் புழுதிவாக்கம் பாலாஜி நகர் 18,19, 20, 21, 23வது தெருக்கள் மற்றும் சுற்றி உள்ள குடியிருப்பு பகுதிகளில் மழைக்காலங்களில் வீடுகளுக்குள் வெள்ளநீர் புகாமல் தடுத்திட கான்கீரிட் தடுப்புச் சுவர் அல்லது இரும்பு ஷட்டர் அமைத்திடக் கோரப்பட்டது என்றும், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 14–ன் செயற்பொறியாளர் 1, அவர்கள் இடத்தினை 24.03.2025 அன்று நேரடியாக கள ஆய்வு செய்து, வீராங்கல் ஓடை மாநகராட்சி கட்டுப்பாட்டின் கீழ் உள்ளதால் "Zero Point" பகுதியில் கான்கிரீட் தடுப்புச் சுவர் அல்லது இரும்பு ஷட்டர் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார் எனவும் ஆனால் இது நாள் வரை எவ்வித பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும், மேலும் ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால்களின் தண்ணீர் வீராங்கல் ஓடையில் நேரடியாக விழும் வகையில் தவறாக கட்டமைக்கப்பட்டதால் வீராங்கல் ஓடையில் பருவ மழையின் போது வெள்ளம் அதிகமாக வருகையில் தண்ணீரின் அழுத்தம் காரணமாக மாநகராட்சி வடிகாலில் மழைநீர் பின்னோக்கி வருகிறது என்றும் அதனால் மழைநீர் வடிகால்களை சற்று வளைத்து மாற்றி அமைத்தால் பருவ மழைக்காலங்களில் தண்ணீர் வடிகாலில் பின்னோக்கி வரும் பாதிப்பு சற்று குறையும் என தெரிவித்து அதன்படி உடனடியாக மாற்றி அமைக்கப்படும் என்று தெரிவித்தாலும், இதுவரை எவ்வித மேல் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் எனவே மேற்குறிப்பிட்டவாறு நடவடிக்கை எடுத்து வெள்ள பாதிப்பை தடுத்திட உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 14, வார்டு 186–ல் ("Zero Point") இரும்பு ஷட்டர் அமைத்து அதிகப்படியான மழைநீர் புழுதிவாக்கம் பகுதியில் உள்ளே செல்லாதவாறு வியாச வித்யாலயா பள்ளி அருகில் ("Zero Point") கான்கிரீட் சுவருடன் கூடிய இரும்பு ஷட்டர் அமைப்பதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வார்டு கமிட்டியில் ஒப்புதல் பெறப்பட்டு பணி மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்திருப்பது பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், சென்னை மாநகராட்சி மண்டலம்14, புழுதிவாக்கம், வார்டு 186 வீராங்கல் ஓடையின் Zero Point-ல் இரும்பு ஷட்டர் அமைப்பதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வார்டு கமிட்டியில் ஒப்புதல் பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்படும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலரின் அறிக்கையில் தெரிவித்தவாறும், உதவிப்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறும், உரிய நடவடிக்கையினை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்14ன் மண்டல அலுவலருக்கு உத்திரவிடுமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 23–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு T.R. ஸ்ரீநிவாசன்,
மனை என் 86, கதவு எண் 3/2
பாலாஜி நகர், 23வது தெரு,
புழுதிவாக்கம்,
சென்னை 91.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை 600 003.

(3) மண்டல அலுவலர்,
மண்டலம் 14,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண் 6/64 புழுதிவாக்கம் பிரதான சாலை,
சென்னை 600 091.

(4) கண்காணிப்பாளர்,
மழைநீர் வடிகால் துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodel Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை 600003.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

24/7/25

செயலாளர்.

24/7/25

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை-600 032